# விலை மனுக்கோரல் (IFB)

## கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்

## திணைக்களப் பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினை பெற்றுக்கொள்ளல் - 2024

## கேள்வி கோரல் இல:- NP/23/1/2/4/V.hir/2024

1. யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலக பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரரிடமிருந்து வடமாகாணக் கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரால் (திணைக்கள பிரதான பெறுகைக்குழு) கோரப்படுகின்றது.
2. வாடகை அடிப்படையில் 2014ஆம் ஆண்டு மாசி மாதம் 11ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வாகனம் ஒன்றினை (Passenger Van with Dual A/C) பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான (NCB) நடைமுறையின் பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தினைப் பெறுவதற்கான தகுதியான மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம் பெறாதவராகவும் ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் பகுதி – 2 இல் கேள்வி கோரலுக்கான தரவுத்தாளில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விலை மனுக்களை அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை பரிசீலித்துப் பார்க்க முடியும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 29/01/2024 முதல் 10/02/2024 வரையான காலப்பகுதியில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.500.00இனை காசாக செலுத்தி மாகாணப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுப் பத்திரத்தினைப் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, குருநகர் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
7. கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் 05/02/2024ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு விலைமனுக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.
8. மூடிய விலைமனுக்கள் யாவும் 11.02.2024 அன்று பி.ப. 3.00மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் யாவும் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றினை மூடிய பின்னர் சமூகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9. அனைத்து விலைமனுக்களுடனும் ரூபா.40,000.00ற்கான 09/05/2024 வரை செல்லுபடியாகும் வகையில் வங்கி உத்தரவாத பிணைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாணக் கட்டடங்கள் திணைக்களம்,**
**கடற்கரை வீதி, குருநகர்.**
**தொலைபேசி இல:- 021-2228091** **திகதி:** 24/01/2024